

தலைமைச் செயலகத்தில் நேற்று (20.02.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் நீர் மேலாண்மையில் புதுமை மற்றும் சிறந்து விளங்குவதை அங்கீகரிக்கும் வகையில் தமிழ் நாடு அரசின் நீர்வளத்துறைக்கு அணை பாதுகாப்பில் நிறுவனங்களை வலுப்படுத்தும் முயற்சிக்கான சிறந்த விருதான "வாட்டர் டைஜஸ்ட் உலக நீர் விருதினை நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். சந்தீப் சக்சேனா, காண்பித்து வாழ்த்துபெற்றார். உடன் காவிரி தொழில் நுட்பக் குழும தலைவர் ஆர்.சுப்பிரமணியன், இயக்கம் பராமரிப்பு மற்றும் மாநில அணை பாதுகாப்பு நிறுவன தலைமைப் பொறியாளர் ந.சுரேஷ், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் கு.அசோகன், சிறப்பு தலைமைப் பொறியாளர் முனைவர் இரா.இராணி, செயற்பொறியாளர் திருமதி வ.வீரலட்சுமி ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான, "நான் முதல்வன் திட்டத்தின் அடுத்த முன்னெடுப்பாக, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், பள்ளிக்கல்வித்துறையுடன் இணைந்து பள்ளி மாணவர்களுக்கான 'நான் முதல்வன் ஒலிம்பியாட்' திட்டத்தை செயல்படுத்தவுள்ளது. இந்த சிறப்புக்குரிய திட்டத்தை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யமொழி முன்னிலையில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

### 'வாட்டர் டைஜஸ்ட்' அமைப்பு - அணைப் பாதுகாப்பு நிறுவனத்தை வலுப்படுத்தும் முயற்சிகளுக்காக

# தமிழ்நாடு நீர்வளத்துறை அலுவலர்களுக்கு சிறப்பு விருதுகள்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பாராட்டினார்!

சென்னை, பிப். 21-

தமிழ்நாடு நீர்வளத்துறை உலக நீர் விருதுகள் வழங்கும் நிகழ்வில் விருது பெற்ற சாதனைக்காக தமிழ்நாடு நீர்வளத்துறை அலுவலர்களை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பாராட்டினார்.

அதன் விபரம் வருமாறு:

'வாட்டர் டைஜஸ்ட்' அமைப்பால் நடத்தப்பட்ட 2023-2024-ஆம் ஆண்டிற்கான உலக நீர் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியில் "அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அணை பாதுகாப்பு நிறுவனத்தை வலுப்படுத்தும் முயற்சிகளுக்கான சிறந்த விருது" தமிழ்நாடு நீர்வளத் துறைக்கு அளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளது. நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களை நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர் சந்தீப் சக்சேனா, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர், கு.அசோகன், காவேரி தொழில் நுட்பக் குழு மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவுத் தலைவர் இரா. சுப்பிரமணியன், இயக்கம் & பராமரிப்பு மற்றும் அணைகள் பாதுகாப்பு அமைப்பு, தலைமைப் பொறியாளர் என்.சுரேஷ், திட்ட இயக்குநர் மற்றும் சிறப்பு தலைமைப் பொறியாளர் முனைவர் இரா. இராணி மற்றும் திட்ட செயற்பொறியாளர் திருமதி வ.வீரலட்சுமி ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இச்சாதனை புரிந்தமைக்காக தமிழ்நாடு நீர்வளத்துறை பொறியாளர்களுக்கு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பாராட்டுத் தெரிவித்தார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வியப்பின் விளிம்பில் நம்மைத் தள்ளும் தமிழ்நாட்டு நிதிநிலை அறிக்கை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, பிப்.21

தமிழ்நாடு அரசின் 2024-2025-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை வியப்பின் விளிம்பில் நம்மைத் தள்ளும் அறிக்கை என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

'திராவிட மாடல்' ஆட்சியின் ஒப்பற்ற முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற பின், சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்படுவது இடைக்கால பட்ஜெட் உள்பட (நான்காவது முழுமையான பட்ஜெட்) நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களால் (165 பக்க உரை) இன்று (19.2.2024) சட்டப்பேரவையில் ஒன்றிய அரசின் நிதி தரவேண்டிய பங்களிப்பைக் கூட சரியாகத் தராமல், பொருளாதாரக் கொள்கை நெருக்கடியை வைத்துள்ள நிலையிலும், நிதிப்பற்றாக்குறை இருந்தபோதிலும், பல்வேறு புதிய திட்டங்களுக்காக ஏராள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பு, பண வீக்கக் கட்டுப்பாடு எல்லாவற்றிலும் தமிழ்நாடு அரசின் தனித்த சாதனை சரித்திரத்தை மிக அருமையாக தயாரிக்கப்பட்டு, புதிய சாதனை சரித்திரத்தை இந்தியாவிற்கே ஒரு புதிய ஒளிகாட்டும் வகையில் ஏழு வண்ணங்கள் ஒளியும், ஏழிசையும் கேட்க முடிகின்றது.

நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள் - வாழ்த்துகள்.

முதலமைச்சருக்கும், நிதியமைச்சருக்கும், நிதித் துறை செயலாளருக்கும் நமது பாராட்டுகள்.

வியப்பின் விளிம்பில் அனைவரையும் தள்ளும் வித்தகு திறன்வாய்ந்த அரிய பட்ஜெட் இது. விரிவாக பிறகு எழுதுவோம்.

தொலைபேசி வாயிலாக

முதலமைச்சருக்கு கி.வீரமணி பாராட்டு!

தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையின் சிறப்பைப்பற்றி, மாண்பைப் பற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டையும், வாழ்த்தினையும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், தொலைபேசியின் வாயிலாகத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தார்.

### தி.மு.க. தொழிலாளர் அணி

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 23-2-2024 வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள், நாடாளுமன்றத் தேர்தல் குறித்து.

**பிடிசி ஜி.செல்வராஜ்**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 20.02.2024

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திண்டிவனம் கோ.வெங்கட்ராமன்

### பிப்ரவரி 21 (2013)



**1974ஆம் ஆண்டு முதல் கழக வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.**

**1989–ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் – 1996–ல் திண்டிவனம் மக்களவை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்.**

**பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**


**இந்தி எதிர்ப்பு போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் போன்ற போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்

# தேன்மொழி - மைக்கேல் இல்ல மணவிழா வரவேற்பு! கனிமொழி கருணாநிதி வாழ்த்து!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் - முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!



சென்னை,பிப்.21

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் தேன்மொழி - என். மைக்கேல் ஆகியோரின் புதல்வி எம்.பிரியங்கா - ஏ.சஞ்சய் குமார் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா (இன்று 21.2.2024 - புதன்கிழமை) மாலை 6.30 மணியளவில் எழும்பூர் - ஆல்பர்ட் திரையரங்கம் அருகில் அமைந்துள்ள ஃபயஸ் மஹாலில் நடைபெறுகிறது.

விழாவில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தலைமை வகிக்கிறார்.

தயாநிதி மாறன் எம்.பி. அன்பகம் கலை, மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை, ஜெ.நற்குணநாதன், துபாய் வி.ஆர். விஜய், வி.எஸ்.கலை, ஃப் பீட்டர்ஜான், ஆயிரம் விளக்கு ஆர்.பாபு, எஸ். சத்யபெருமாள், எம்.ஏ. நந்தினி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

து.விக்டர், எம்.ஆர். ஜம்புலிங்கம், மெய்.சரவணன், ஆர்.லிங்கேசன் மெய். சண்முகம், எம். சிவா, தேவிகரிகாலன், கோபி நாகலிங்கம், கி. ஜான்டிசில்வா, ஏ.கமல கண்ணன், சி.எஸ்.ஆர். சந்தோஷ், பழக்கடை ஆறுமுகம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மணவிழா வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எம்.கே. மோகன், எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ.,

கென்னடி, நுங்கை வி. எஸ்.ராஜ், குமாரி விஜய குமார், கே.ராணி ரவிச்சந்திரன், கே.ஜே.சரவணன், கலைகதிரவன், அழகிரிசதாசிவம், எம்.டி.ஆர். நாதன், பா.இராபட், எம். வெற்றிசெல்வி, பகுதி செயலாளர்கள் ந.இராமலிங்கம் எம்.சி., ஏ.ஆர். பி.எம்.காமராஜ் எம்.சி., எஸ்.மதன்மோகன் எம்.சி., ச.பரமசிவம், வினோத் வேலாயுதம், கே.ஏழுமலை எம்.சி., வி.சுதாகர்,

மாவட்ட கழக நிர்வாகிகள் அரிமா ஆர்.என். துரை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு உள்ளிட்ட பலரும் வாழ்த்துகின்றனர்.

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எம்.கே.மோகன் பங்கேற்பு!

# அண்ணாநகர் வடக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் - பாக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் அறிக்கை!

சென்னை, பிப்.21

அண்ணாநகர் வடக்குப் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் இன்று புதன்கிழமை (21.02.2024) மாலை 5.00 மணியளவில் பகுதி கழக செயலாளர் அலுவலகத்தில் அவைத்தலைவர் பா. பிரபு தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு, எம்.சி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், தொகுதி பொறுப்பாளர் அப்துல் மாலிக் (மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்) ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குவார்கள்.

இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் அவசியம் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

பொருள் : நாடாளுமன்ற தேர்தல் வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல், பாகம் வாரியாக கூட்டம் நடத்துதல் மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு ச.பரமசிவம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இரா.துரைராஜ் தலைமையில்! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்!

# சைதை கிழக்கு பகுதி துணைச் செயலாளர் மு.பாக்கியலட்சுமி இல்ல விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாழ்த்துரை! தமிழச்சி தங்கப்பாண்டியன் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, பிப்.21

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி துணை செயலாளர் மு.பாக்கியலட்சுமி பேத்திகள் 169அ வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சைதை மு.இளவரசன் தம்பி மு.சிலம்பரசன் கஸ்தூரி தம்பதியரின் குழந்தைகள் சி.சாதனா, சி.சஞ்சனா ஆகியோரின் காதணி விழா இன்று (21.02.2024, புதன்கிழமை) மாலை 6.30 மணிக்கு சென்னை 15 சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் அமைந்துள்ள கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13வது வார்டு குழு தலைவர் இரா.துரைராஜ் தலைமை வகிக்கிறார், சைதை மேற்கு பகுதி செயலாளர் 10வது வார்டு குழு தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத் மின்னல் கந்தப்பன் சைதை மா.அன்பரசன் வழக்கறிஞர் எம்.சிரிதரன் எம்.சி. தா . மோகன் குமார் எம்.சி. வட்ட கழக செயலாளர்கள் சைதை மு.இராஜா எல்.ஆரோக்கிய ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மாவட்ட பிரதிநிதிகள் என்.நந்தகோபால் எஸ். ராதாகிருஷ்ணன் ஏ.மஜீத் இரா.சுதாபிரியன் வட்ட கழக நிர்வாகிகள் வே. கோதண்டன் ஆ.வரதன் சொ.முருகையன் டி.கண்ணன் மு.சாந்தி பா.செல்லபாண்டியன் கேபிள் சம்பத் கே.பி.மகேஷ் எம்.பாபு ஏ.ரியாஸ்அகமது ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்துகிறார்கள்.

சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காதணி விழாவில் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்துகிறார்.

விழாவில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர், தமிழச்சி தங்கப்பாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

மேலும் சைதை கிழக்கு மேற்கு பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர். அருணகிரி, களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர். ரமேஷ் கவிதா கௌதம், வி.பி.ஜானகிராமன், மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், த.பாபு, அஞ்சல் என்.ராமன், வட்ட கழக செயலாளர்கள் நா.ராதாகிருஷ்ணன், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், எஸ்.பாட்சா, எஸ். ஆர்.செந்தில் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா அட்கோ கமலநாதன்,

மாவட்ட பிரதிநிதிகள் டி.வி.நரசிம்மன், ச.சேகர், ஜி.செல்வராஜ், க.உமாபதி, வே.முருகன், ஜி.யோவான், எஸ்.ஜே.சலாம், ந.பாபு, மு.மகேஷ், கே.எம்.எஸ். கணேசன், வே.ரமேஷ்குமார், எஸ். ரவி,

169வது வட்ட கழக நிர்வாகிகள் அ.ஆரி, இரா. தமிழ்வாணன், துரை சரவணன், சைதை ஆ.விக்டர், மை.அருள்ராஜ், வி.என். செல்வமணி, சூரியன் பிரபு, அ.ஆனந்த்ராஜ், ஆ.பரணி,

169வது அ" வட்டத்தின் மாவட்ட பகுதி வட்ட அணிகளின் நிர்வாகிகள் சி.தேவேந்திரன், பி.திவாகர், ஆ.தேவகுமாரன், எஸ்.கரிமுல்லா, எ.சுப்பிரமணி, எஸ்.ஏ.மோகன்குமார், ஏ.துரைராஜ், கி.சிவபிரகாஷ், ந.புஷ்பராஜ், மு.மணவாளன், எஸ்.சவரிமுத்து, முகமது ரபியூதின் ஆர்.கோபாலகிருஷ்ணன், ஆர்.எஸ். டி.கோட்,டி சி.வீரா, மு. பாலாஜி, எஸ்.சுரேஷ், மு.கருணாமூர்த்தி, ஆர்.சுந்தர்ராஜன், எஸ்.காதர்ஷெரீப், ராஜா சம்பத், சி.செல்லத்துரை, அ.அசோக்குமார், கி.பாபு, தே.விஸ்வநாதன், எம்.இம்ரான்கான், நூருல்லா, இள.அரவிந்தன், எம்.அருண்குமார், பா. செ.நிக்கேஷ், ஜெ.அகமது, அனீஸ், க.ரஞ்சித், அ.ரிஷிகுமார், ஆ.பிரேம்குமார், உமாயூன் எ.சிவபிரசாத், இரா.கவின், இரா.எழிழன், பி.எஸ்.ராஜேந்திரன், ராஜா கார்த்திக், ச.ராஜேஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.